4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 70/2022** **நாள்: 21.11.2025** **எ.ம.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துகுமார் | தொழில் | : | உதவி ஆய்வாளர், தளி காவல் நிலையம் |
| த/பெ | : | கிருஷ்ணசாமி | கிராமம் | : | தளி |
| வயது | : | 37 | தாலுகா | : | உடுமலைபேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -**

புகாரில் சம்பவத்தை யாரும் நேரில் பார்த்ததாக சொல்லவில்லை. அதனடிப்படையில் புகாரிலும், யாரும் நேரில் பார்த்ததாக பதிவு செய்யப்படவில்லை. புகார்தாரர் புகாரில் ஜனார்த்தனன் என்பவர் தனது கணவர் ரோட்டில் விழுந்து கிடந்ததை பார்த்து தனது பக்கத்து வீட்டுக்காரர் சந்திரன் என்பவரிடம் சொன்னதாகவும் சொல்லியுள்ளார். ஜனார்த்தனனை தவிர மேற்படி விபத்து வழக்கில் யாரும் கண்கண்ட சாட்சிகள் இல்லை. எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை தவிர ஜனார்த்தனன் புலன் விசாரணையில் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். வேறு யாரும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக எங்கள் புலன் விசாரணையில் தெரியவரவில்லை. சம்பவ இடத்தில் ஒரு டைரி மற்றும் எதிரி வாகனத்தின் சிதைந்த பாகங்கள் கிடந்துள்ளது, அதை வைத்து எதிரி தான் விபத்திற்கு காரணம் என்றும் புலன் விசாரணையில் முடிவுக்கு வந்தோம். மேற்படி டைரியையும், உடைந்த பாகத்தையும் மட்டும் வைத்து எதிரி தான் குற்றவாளி என்று முடிவுக்கு வரவில்லை. நேரடியாக பார்த்த சாட்சியத்தை வைத்து முடிவுக்கு வந்துள்ளோம். முதல் தகவல்

அறிக்கைக்கும், இறுதியறிக்கைக்கும் வேறுபாடுகள் இல்லை. மேற்படி விபத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்கு நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

சரியான முறையில் புலன் விசாரணை செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.21 15:54:15 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.